2015 செப்டம்பர் 29]

374—

சாலையை அகலப்படுத்துதல்

***48037—டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பத்மநாபபுரம் தொகுதி, தக்கலை உபகோட்டம், மேக்காமண்டபம்–தக்கலை நெடுஞ்சாலையை அகலப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், தக்கலை உபகோட்டம், மேக்காமண்டபம்–தக்கலை நெடுஞ்சாலையை அகலப்படுத்தும் திட்டம் ஏதும் தற்சமயம் இல்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன் அவர்கள்.*

டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்மநாபபுரம் தொகுதிக்குட்பட்ட பத்மநாபபுரம்–மேக்காமண்டபம் சாலை 4.7 கி.மீ. தூரம் போக்குவரத்து நெருக்கடிமிக்க சாலையாகும். இந்தச் சாலையில் அதிக அளவில் பேருந்துகளும், கனரக வாகனங்களும் இயங்கி வருகின்றன. அடிக்கடி விபத்துகளும் ஏற்பட்டு வருகின்றன. இந்தச் சாலை தற்பொழுது மாவட்ட இதர சாலை அதாவது ODR சாலையாக இருந்து வருகிறது. குமரி மாவட்டம், நெடுஞ்சாலைத் துறை கோட்டப் பொறியாளரிடமிருந்து சாலையை அகலப்படுத்துவதற்கான அறிக்கை நெடுஞ்சாலைத் துறை தலைமைப் பொறியாளர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. எனவே, மேற்படி ODR சாலையை MDR சாலையாக அறிவித்து*

அதற்கான வடிகாலும் அமைத்து சாலையை அகலப்படுத்தித் தர மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், தக்கலை உபகோட்டத்தில் மேக்காமண்டபம்–தக்கலை சாலையானது பத்மநாபபுரம்–மேக்காமண்டபம் சாலை 4.7 கி.மீ. நீளமுடைய மாவட்ட இதர சாலையாகும். இச்சாலை ஒரு வழித்தட அகலம் கொண்ட தார்ச் சாலையாகும். இச்சாலையில் தற்பொழுது போக்குவரத்து செறிவு 2000–க்கும் குறைவாக உள்ளதால் சாலையினை அகலப்படுத்துவதற்கு தற்சமயம் சாத்தியக்கூறுகள் இல்லை. இருப்பினும், போக்குவரத்து செறிவு அதிகரிக்கும்பொழுது அகலப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன் அவர்கள்.

டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்மநாபபுரம் நகராட்சி மற்றும் மூன்று பேரூராட்சிகள் உட்பட பொதுமக்கள் அனைவரும் பயன்படுத்தி வருகின்ற இச்சாலையை அகலப்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்வதுடன் எனது தொகுதியில் மிகவும் பழுதடைந்து, குண்டும் குழியுமாக காணப்படும் குமாரபுரம்–பெருஞ்சிலம்பு சாலையை சீரமைக்க ரூ.175 இலட்சமும் குலசேகரம்–திருவெறும்பூர் சாலையை சரிசெய்ய ரூ.170 இலட்சமும் நிதி ஒதுக்கீடு செய்து ஆறு மாதங்களாகியும் இதுவரையில் எந்தப் பணியும் ஆரம்பிக்கப்படவில்லை. ஆகவே, இப்பகுதி மக்களின் நலனைக் கருத்தில்கொண்டு அந்த இரண்டு சாலைகளையும் சீரமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

2015 செப்டம்பர் 29]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய சட்டமன்றத் தொகுதியில் மாண்புமிகு முதலமைச்சர் அம்மாவினுடைய நான்காண்டு கால ஆட்சியிலே 63.60 கி.மீ. நீள சாலைகள் ரூ.21.72 கோடி செலவில் அகலப்படுத்தி மேம்பாடு செய்யப்பட்டிருக்கின்றன. அத்துடன் 2015—2016 ஆம் ஆண்டு CRIDP திட்டத்தின் மூலமாக 21 கி.மீ. நீளமுடைய சாலைகள் 13 கோடி ரூபாய் செலவில் சீரமைப்பதற்காக Tender விட இருக்கின்றார்கள். அதேபோல, மத்திய சாலை நிதியிலிருந்து அதாவது CRF நிதியிலிருந்து 51 கி.மீ. நீளமுள்ள சாலைகள் 23 கோடி ரூபாய் செலவிலே அங்கே பணிகள் மேற்கொள்வதற்காக மாண்புமிகு அம்மாவினுடைய அரசால் விரைந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இரண்டு சாலைகளைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். மழைக்காலமாக இருக்கின்ற காரணத்தினாலே, மழைக்காலத்தில் போடப்படுகின்ற சாலைகள் சரியாக அமையாத காரணத்தினாலேதான் இந்த காலகட்டத்தில் சாலை அமைக்க முடியாத சூழ்நிலை இருக்கின்றது. இருப்பினும் விரைந்து அந்தச் சாலைகளை அமைப்பதற்குண்டான நடவடிக்கையை மாண்புமிகு அம்மாவினுடைய அரசு எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 375, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். ராமமூர்த்தி, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

375—

பலவகை தொழில்நுட்பக் கல்லூரி

***46759—திரு. ஆர். ராமமூர்த்தி:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விக்கிரவாண்டி தொகுதி, விக்கிரவாண்டியில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?